# டாக்டர். மகாலிங்கம் பொறியியல் தொழில்நுட்பக் கல்லூரி

**பொள்ளாச்சி – 642003**

**கோவிட்- 19 - பெற்றோர் ஒப்புதல் படிவம்**

தேதி:

**பெறுநர்**

முதல்வர்
டாக்டர். மகாலிங்கம் பொறியியல் தொழில்நுட்பக் கல்லூரி
பொள்ளாச்சி – 03

**துறைத் தலைவர் வாயிலாக,**

மதிப்பிற்குரிய ஐயா,

பொருள்: கோவிட்-19- ஒப்புதல் படிவம் சமர்ப்பித்தல் - தொடர்பாக

………………………….. (பெற்றோர் பெயர்)ஆகிய நான், தங்களது கல்லூரியில் பயின்று வரும் எனது மகன்/மகள்,

| | | |
|---|---|---|
| மாணவர்/மாணவி பெயர் | : …………………….. | முகவரி: ……………………………..… |
| வகுப்பு | : ……………………… | ………………….…………….…… |
| துறை | : ……………………..… | ……………………………….….. |
| பதிவு எண் | : ……………………..… | ……………………………….….. |

கல்லூரி வகுப்புகள் மற்றும் அவை சார்ந்த அனைத்து நடவடிக்கைகளிலும் ……………… (தேதி) முதல் பங்கு பெற முழு மனதோடு சம்மதிக்கின்றேன்.

இத்துடன்,

(1) எனது மகன்/மகள் கல்லூரி நிர்வாகத்தின் மூலம் வழங்கப்படும் கோவிட்-19 வழிகாட்டுதல்கள் அனைத்தையும் பின்பற்றுவார் என உறுதியளிக்கின்றேன். மேலும் தன் சுத்தம் பேண அறிவுரைகள் வழங்கி முகக்கவசங்களுடன் கல்லூரிக்கு அனுப்பி வைப்பேன்.

(2) கோவிட் பெருந்தொற்றின் அறிகுறிகளாகிய காய்ச்சல், சளி, இருமல், மூச்சுத்திணறல் மற்றும் தொண்டை எரிச்சல் ஏதேனும் காணப்பட்டால் உடனடியாகத் துறைத் தலைவர்/வகுப்பு ஆசிரியருக்கு எனது மகன்/மகள் தெரியப்படுத்துவார் என உறுதியளிக்கின்றேன்.

(3) எனது மகன்/மகளுக்கு ஏதேனும் உடல் உபாதைகள் இருப்பின், என்.ஐ.ஏ சுகாதார மையத்தில் மருத்துவர் மற்றும் செவிலியர்களால் அவசர முதலுதவி செய்ய அனுமதி அளிக்கின்றேன்.

(4) உடல் வெப்ப அளவீடு, கை கழுவுதல் மற்றும் உடல் ஆக்சிஜன் அளவீடு போன்ற கோவிட் பெருந்தொற்று முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் முழுமையாக எனது மகன்/மகள் ஒத்துழைப்பார் என உறுதியளிக்கின்றேன்.

(5) எனது மகன்/மகள் தமிழக அரசால் வழங்கப்பட்ட சீர்தர இயக்கச் செய்முறை (SOP) [GO.MS.No:3133/அ3/2021 நாள்:23.08.2021] மற்றும் கல்லூரி நிர்வாகத்தால் வழங்கப்படும் பின்வரும் வழிகாட்டுதல்களை,

(அ) கல்லூரிக்கு வரும் மாணவ/மாணவியர் முகக்கவசம் அணிந்து சமூக இடைவெளியை கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும்.

(ஆ) வகுப்புக்குத் தேவையான பொருட்கள் அன்றி பிற பொருட்கள் எதையும் கல்லூரிக்குள் எடுத்து வரக்கூடாது.

(இ) வகுப்பறை, ஆய்வகம், உணவகம் மற்றும் நூலகம் எனக் கல்லூரியின் அனைத்துப் பகுதிகளிலும் சமூக இடைவெளியைப் பின்பற்ற வேண்டும்.

(ஈ) மாணவ/மாணவியர் உணவு உண்ணும்போது, உணவு பரிமாறிக் கொள்ளக் கூடாது. மேலும் அங்குக் கண்டிப்பாகச் சமூக இடைவெளியைக் கடைபிடிக்க வேண்டும்.

(உ) கல்லூரி நாட்களில் விடுப்பு எடுத்து வெளியூர் பயணம் மேற்கொண்டு மீண்டும் கல்லூரிக்கு வரும்போது, விடுப்பிற்கான காரணம் மற்றும் பயண விபரங்களை முறையாக துறைத் தலைவர்/வகுப்பு ஆசிரியரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

என இவை அனைத்தையும் உறுதியாகப் பின்பற்றுவார் எனச் சான்றளிக்கின்றேன்.

(6) எனது மகன்/மகள், விடுதிக்காப்பாளர் அல்லது வகுப்பு ஆசிரியர் ஆகியோரின் முறையான அனுமதியின்றி கல்லூரி வளாகத்திற்கு வெளியில் செல்லமாட்டார் என உறுதியளிக்கிறேன்.

(7) எதிர்பாராத நிகழ்வுகளான கோவிட் தொற்று மற்றும் ஏதேனும் தொற்று நோய்கள் எனது மகன்/மகளுக்கு பரவும் பட்சத்தில் அதற்கு நானே முழு பொறுப்பேற்கின்றேன். மேலும் கல்லூரி நிர்வாகம் மற்றும் வேறு எவரையும் காரணப்படுத்த மாட்டேன் எனவும் உறுதியளிக்கின்றேன்.

(8) கல்லூரி நிர்வாகத்தால் ஒதுக்கப்பட்ட வாகனம் நிறுத்துமிடத்தில் எனது மகன்/மகளை இறக்கி விட்டு (அல்லது) கூட்டிச் செல்வேன் என உறுதியளிக்கின்றேன்.

பெற்றோர் கையொப்பம் :

பெயர் :

அலைபேசி எண் :

துறை ஒருங்கிணைப்பாளர்　　　　துறைத் தலைவர்